பதிவஞ்சல்

**சென்னை-32, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் அலுவலக**
**வேளாண்மை இணை இயக்குநர் (வேளாண் வணிகம்)(பொ)**
**அவர்களின் செயல்முறை ஆணைகள்.**
**முன்னிலை: திருமதி.பா.மேரிஅமிர்தாபாய்,பி.எஸ்ஸி.,(விவ.,)**

செ.மு.ஆ.எண்.வொநிபி.3/33186/2017 நாள்:23.02.2018.

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 2015-2016 -ஆம் ஆண்டு வரை போட்டித் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவ்வலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகத்தில் பணிபுரியும் தட்டச்சர்களுக்கு பணிவரன்முறை செய்து - ஆணையிடல்.

பார்வை : வேளாண்மை இயக்குநர், சென்னை-5 அவர்களின் கடித எண்.அபபி.3/159754/2017-1 நாள்:30.01.2018.

******

ஆணை:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-இல் அடங்கிய தட்டச்சர் பதவிக்கு 2015-2016 - ஆம் ஆண்டு வரை நடைபெற்ற போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இவ்வலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகத்தில் பணிபுரியும் கீழ்க்காணும் தட்டச்சர்களுக்கு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் உறுதியாக்கம் செய்யப்பட்ட விவரம் பார்வையிலுள்ள கடிதத்தில் "சென்னை உயர்நீதிமன்றம்/மதுரை அமர்வுக்கான நீதிப்பேராணை விண்ணப்பம் WP முடிவுகளுக்குட்பட்டு தொகுதி IV/2015-2016 -இல் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பணிவரன்முறை செய்யலாம்" என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்நிபந்தனையின் பேரில் கலம் 4-இல் உள்ளவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர்/பதவி திருவாளர்கள் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | வி.கா.குணசேகரன், தட்டச்சர். | 30.10.2017 மு.ப. | 30.10.2017 மு.ப. | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் அலுவலம், சென்னை -32 |
| 2. | ந.குப்புசாமி, தட்டச்சர். | 01.11.2017 மு.ப. | 01.11.2017 மு.ப. | வேளாண்மை துணை இயக்குநர்(வேளாண் வணிகம்) சேலம். |

மேலும் இப்பணியாளர்களை தட்டச்சர் பதவியில் கலம் (4)-இல் உள்ளவாறு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணியில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

ஒம்/-பா.மேரிஅமிர்தாபாய்
வேளாண்மை இணை இயக்குநர்
(வேளாண் வணிகம்)(பொ)

பெறுநர்
திரு.வி.கா.குணசேகரன், தட்டச்சர், இவ்வலுவலகம்.
திரு. ந.குப்புசாமி, தட்டச்சர்,
வேளாண்மை துணை இயக்குநர்
(வேளாண் வணிகம்), சேலம்.
நகல் :மற்றும் வழி : வேளாண்மை துணை இயக்குநர்
(வேளாண் வணிகம்), சேலம்.

} பணியாளரின் பணிப்பதிவேடு (1 பவுண்டு) மற்றும் பதிவுறுத்தாள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அவை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: வேளாண்மை இயக்குநர், சென்னை-5
நகல்: இருப்பு கோப்பு.

//உத்தரவின்படி//

26/2/18
ஆட்சி அலுவலர் (பொ)

26.2.18